**விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், எறையானூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திருமதி. R.கெஜலட்சுமி**

தீர்மானம் எண் : 145 நாள் : 27.03.2024

பொருள் : உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் - எறையானூர் கிராமம், சர்வே எண்கள் : 73/1A1A, 73/1A2A இடத்தில் ஏக்கர் 1.93 செண்டில் அமைந்துள்ள **வெற்றி நகர்** குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் - வழங்குவது குறித்து.

பார்வை :

1. மனுதாரர் திரு. B.அசோக், அவர்களின் விண்ணப்பம் நாள் : 26.02.2024
2. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் :
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ROC No.15031/ 2023/TCP நாள் :23.11.2023.
4. சார்பதிவாளர், பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், அவரப்பாக்கம், ஆணை எண்.200/2023, நாள் : 23.11.2023.
5. கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது
   பயன்மாற்று கட்டணம் செலுத்து ரசீது நாள் : 25.03.2024.

**உத்தரவு :**

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு -விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் - எறையானூர் கிராமம், சர்வே எண்கள் : 73/1A1A, 73/1A2A இடத்தில் ஏக்கர் 1.93 செண்டில் அமைந்துள்ள **வெற்றி நகர்** குடியிருப்பு மனைப்பிரிவு, இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3) ல் சுட்டிக்காட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டுள்ளது. பார்வை (4) ல் சுட்டியபடி சாலை, மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தான பத்திர ஆவண எண். 4640/2023 நாள் : 07.11.2023 ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை (3) ல் சுட்டியபடி பார்வை (5) ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றும் நில பயன் மாற்று கட்டணம் செலுத்தப்பட்டு உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணைய தளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி எறையானூர் ஊராட்சி மன்றத் தீரமாண எண். 145 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும் தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின் படி சம்மந்தப்பட்ட ஊராட்சி அபிவிருத்திக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேலும் பொதுத்துறையில் இருந்து (Public Road) மனைப்பிரிவு அமையும் இம் வரை அணுகு சாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப் பகுதியை உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ளும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் (அல்லது) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

3) மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சியின் அனுமதி பெற வேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் எனத் தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

4) மனைப்பிரிவு வடைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப் பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

...3...

5) நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.

6) சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு மரம் ஒன்று நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

7) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்திரவு எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் - எறையானூர் கிராமம், சர்வே எண்கள் : 73/1A1A, 73/1A2A இடத்தில் ஏக்கர் 1.93 செண்டில் அமைந்துள்ள வெற்றி நகர் உத்தேச குடியிருப்பு சாதாரண வகை மனைகள் 42 ( மனை எண்கள் 1 முதல் 42 மனைகளுக்கு மட்டும்) மனைகளுக்கு வெற்றி நகர் என்னும் பெயருடன் எறையானூர் ஊராட்சியால் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு :

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

R. கெஜலட்சுமி
27-3-2024

ஊராட்சி மன்றத் தலைவர்
எறையானூர் ஊராட்சி,
மரக்காணம் ஊராட்சி ஒன்றியம்,
விழுப்புரம் மாவட்டம்.

பெறுதல் :

திரு **B.அசோக்** த/பெ பாலசுப்ரமணியன்,
நெ.48ஏ, பிள்ளையார் கோவில் தெரு,
செங்குந்தர்பேட்டை, மதுராந்தகம்,
மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

நகல் :

1. உதவி இயக்குனர்/ஊராட்சிகள்,விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குனர்/மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அவரப்பாக்கம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. வட்டாட்சியர், திண்டிவனம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.